DINAMALAR (10/12/14)




■ புதுச்சேரியில் நேற்று துவங்கிய நூலக மாநாட்டில், விழா மலரை, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வெளியிட்டார். அருகில், புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் இயக்குனர் பியரி கிரார்டு, டெல்நெட் நிறுவன இயக்குனர் கவுல், அனுரூபா நாயக், சங்கீதா கவுல்.

# மொபைல்போனில் நூலகம் அப்துல் கலாம் வலியுறுத்தல்

புதுச்சேரி, டிச. 10–

'மொபைல் போன்களில், புத்தகங்கள் படிக்கும் வசதியை ஏற்படுத்த வேண்டும்' என, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசினார்.

புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் நிறுவனமும், டெல்நெட் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' என்ற தலைப்பிலான, மூன்று நாள் மாநாடு, புதுச்சேரியில் உள்ள, ஓட்டல் ஆனந்தா இன்னில் நேற்று துவங்கியது.

மாநாட்டை துவக்கி வைத்து, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசியதாவது:

வரும் 2022ம் ஆண்டுக்குள், 50 கோடி பேரை திறன்மிக்கவர்களாக மாற்றுவதற்கு, மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைய, நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கும்.

நமது நாட்டில் 80 கோடி பேர், மொபைல் போன்களை பயன்படுத்துகின்றனர். எனவே, மொபைல் போன்களில், புத்தகம் படிக்கும் வசதியை ஏற்படுத்தினால் பயன் உள்ளதாக இருக்கும்.

'எம்–லைப்ரரி' எனப்படும், மொபைல்போன் நூலகத்தை அறிமுகம் செய்வது சாத்தியமானதுதான். இதனால், அதிகமானவர்களை, புத்தகம் படிக்க வைக்க முடியும்.

தற்போது, தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதால், மொழி பெயர்ப்பு வசதி மொபைல் போனில் ஏற்கனவே உள்ளது. எனவே, 'எம்–லைப்ரரி' மூலமாக, மற்ற மொழி புத்தகங்களையும், உடனுக்குடன் மொழிபெயர்த்து படிப்பதற்கு வாய்ப்பு உருவாகும். மேலும், சாப்ட்வேர் மூலமாக, புத்தகங்களில் உள்ளதை படிக்கச் செய்து, கேட்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தலாம்.

இது, பார்வையற்றவர்களுக்கு மட்டுமல்ல, ஒரு மொழியை படிக்கத் தெரியாமல், பேசுவதை புரிந்து கொள்பவர்களுக்கும் மிக உதவியாக இருக்கும்.

தினசரி ஒரு மணி நேரமாவது, நல்ல புத்தகங்களை படிப்பதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். இதற்கு, ஒவ்வொரு வீட்டிலும் சிறிய நூலகத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்த நூலகத்தில், குழந்தைகளுக்கான புத்தகங்களும் இருக்க வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் புத்தகங்களை படிப்பதை பார்த்து, குழந்தைகளும் படிக்க ஆரம்பித்து விடுவர். அதுபோல படிக்க ஆரம்பித்தால், ஆசிரியர்களாக, விஞ்ஞானிகளாக, பொறியாளர்களாக வர வாய்ப்புள்ளது.

இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.

# கலாமுடன் போட்டோ எடுக்க ஆர்வம் காட்டிய இளைஞர்கள்

புதுச்சேரி, டிச. 10–

நூலக மாநாட்டை, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் துவக்கி வைத்தார்.

புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிடியூட், டெல்நெட் நிறுவனம் இணைந்து, 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' என்ற தலைப்பில், 17வது நூலக மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

மாநாட்டின் துவக்க விழா, ஓட்டல் ஆனந்தா இன்னில் நேற்று நடந்தது. முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், மாநாட்டை துவக்கி வைத்து, விழா மலரை வெளியிட்டார். நூலக பயன்பாடு குறித்த கண்காட்சியையும் திறந்து வைத்தார்.

பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் இயக்குனர் பியரி கிரார்டு தலைமை தாங்கினார். டெல்நெட் நிறுவன இயக்குனர் கவுல், மாநாடு குறித்து விளக்கி கூறினார்.

முன்னதாக, பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் முதன்மை நூலகர் அனுருபா நாயக் வரவேற்றார். மாநாட்டின் இணை அமைப்புச் செயலாளர் சங்கீதா கவுல் நன்றி கூறினார்.

நாளை(11ம் தேதி) வரை நடக்க உள்ள இந்த மாநாட்டில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் இருந்தும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் நூலகர்கள், அறிஞர்கள், மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

## நூலகருக்கு கவுரவம்

*விழா அரங்கத்துக்கு வந்த அப்துல் கலாமிற்கு, மலர்ச்செண்டு அளித்து வரவேற்றனர். மலர்ச் செண்டை பெற்றுக் கொண்ட அப்துல் கலாம், மேடைக்கு எதிரே பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்த, வயது முதிர்ந்த, கல்யாணசுந்தரம் என்ற நூலகரை அழைத்து, அவரது கையில் மலர்ச் செண்டை அளித்து கவுரவித்தார்.*

*அப்துல் கலாமுடன் போட்டோ எடுத்துக் கொள்ள, இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் மிகுந்த ஆர்வம் காட்டினர்.*

*பாதுகாப்பு காரணமாக, போலீசார் அனுமதிக் காததால், அப்துல் கலாமை தங்களது மொபைல் போன்களில் போட்டி போட்டுக் கொண்டு படம் எடுத்தனர்.*